டிஜிட்டல் டெய்லி

# அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 24.11.2024 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 131- Madurai | Online Edition

# காற்றழுத்த தாழ்வு பகுதி உருவானது!

## நாளை முதல் மிக கனமழைக்கு வாய்ப்பு!

சென்னை, நவ.23

கிழக்கு இந்திய பெருங்கடல் பகுதி மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகியுள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.

தெற்கு அந்தமான் கடல் மற்றும் தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் நிலவிய வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக, கிழக்கு இந்திய பெருங்கடல் பகுதி மற்றும் அதனை ஒட்டிய



தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகியுள்ளது. இது மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, வருகின்ற 25 ஆம் தேதி வாக்கில், தெற்கு வங்கக் கடலின் மத்திய பகுதியில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுபெறக்கூடும். இது மேலும் அதற்கடுத்த இரு தினங்களில் வடமேற்கு திசையில் தமிழகம்- இலங்கை கடற்கரையை நோக்கி நகரக்கூடும்.

பூமத்திய ரேகையை ஒட்டிய கிழக்கு இந்திய பெருங்கடல் பகுதி மற்றும் தென்கிழக்கு வங்கக்கடல் பகுதி முதல் குமரிக்கடல் பகுதி வரை ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக, இன்று கடலோர தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், உள் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.




நாளை 25ம் தேதியில் கடலோர தமிழகத்தில் அநேக இடங்களிலும், உள் தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

மயிலாடுதுறை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர் மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், கடலூர், அரியலூர், சிவகங்கை புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# இப்கோ நானோ உரங்கள் விழிப்புணர்வு கருத்தரங்கம்

தஞ்சாவூர், நவ.23

தஞ்சாவூர் மாவட்டம், வெட்டிகாடு கிராமத்தில் நானோ உரங்கள் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், இப்கோ கள அதிகாரி சரவணன் நானோ யூரியா, நானோ டி.ஏ.பி மற்றும் சாகரிகா திரவ உரங்களை பயன்படுத்தும் முறை மற்றும் நன்மைகள் பற்றி விளக்கினார். அவர், நெற்பயிரில் விதை/நாற்று நேர்த்தி செய்ய நானோ டி.ஏ.பியை ஒரு லிட்டர் நீருக்கு 5 மி.லி. அளவில் கலந்து விதை/நாற்றை நனைத்து உலர்த்தி நடவு செய்யுமாறு கூறினார். நாற்று நேர்த்தி செய்வதனால் பயிரின் வளர்ச்சி சீராகவும், அதிகப்படியான தூர்வளர்ச்சி காணப்படும் என்றார். மேலும், இலைவழி தெளிப்பில் ஒரு ஏக்கருக்கு 500 மி.லி. நானோ யூரியா மற்றும் 500 மி.லி. நானோ டி.ஏ.பி கலந்து நடவு செய்த 30-35 நாட்களில் முதல் தெளிப்பாகவும், பின்னர் நடவு செய்த 45-50 நாட்களில் இரண்டாம் தெளிப்பாகவும் தெளிக்க வேண்டும் என்றார். நானோ உரங்கள் பயன்படுத்துவதால், இரசாயன உரங்களின் பயன்பாட்டால் ஏற்படும் மண் மற்றும் சுற்றுசூழல் மாசுபாட்டை தவிர்க்கலாம் என்று தெரிவித்தார். மேலும், நானோஉரங்களுடன் பிற வேளாண் பூச்சிக்கொல்லி மருந்துகளும் கலந்து தெளிப்பதனால் இடுபொருள் செலவு குறையும் என்றும் கூறினார்.



அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தயார்நிலை உணவுகள் தயாரித்தல் பயிற்சி

கோயம்புத்தூர், நவ.23

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தயார்நிலை உணவுகள் தயாரித்தல் பயிற்சி 26 மற்றும் 27.11.24 ஆகிய இரண்டு நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை, அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெறும். கீழ்கண்டஉணவு பொருட்களை தயாரிப்பதற்கு பயிற்சி வழங்கப்படும்.

- தோசை மிக்ஸ்
- அடை மிக்ஸ்
- டேக்ளாமிக்ஸ்
- பிசிபெலா பாத் மிக்ஸ்
- கீர் மிக்ஸ்
- ஐஸ்கீரிம் மிக்ஸ்
- தக்காளி சாதம் மிக்ஸ்
- சூப் மிக்ஸ்
- குளோப் ஜாமூன் மிக்ஸ்




ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770/- (ரூ.1500 + GST 18%) - பயிற்சி முதல் நாளன்று செலுத்த வேண்டும்.

பயிற்சியானது வாயில் எண்.7, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், மருதமலை சாலை வழியாக, கோயம்புத்தூர் - 641 003ல் நடைபெறும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர், தொலைபேசி எண் : 94885 18268, அலைபேசி எண் : 0422 6611268, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் — 23.11.2024

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 25 | 30 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 25 | 30 | 57 | உருளை (பிற) | 30 | 38 |
| 1B | கத்திரி(Nadu) | 40 | 44 | 57A | உருளை(ஊட்டி) | 34 | 58 |
| 2 | வெண்டை | 45 | 50 | 58 | மேரக்காய் | 22 | 26 |
| 3 | தக்காளி (நாடு) | 25 | 28 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 35 | 40 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 22 | 25 | 60 | கேரட் | 50 | 64 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 60 | 65 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 60 | 70 |
| 6 | புடலை | 30 | 35 | 62 | நூல்கோல் | 55 | 60 |
| 7 | பீர்க்கன் | 40 | 44 | 63 | டர்னிப் | 55 | 60 |
| 8 | சுரைக்காய் | 25 | 30 | 64 | மு.கோஸ் | 24 | 28 |
| 9 | பாகற்காய் | 30 | 36 | 65 | மு.கோஸ்(கலர்) | 25 | 30 |
| 10 | கொத்தவரை | 35 | 40 | 66 | காளிபிளவர் | 44 | 48 |
| 11 | பூசணி | 12 | 15 | 67 | பட்டாணி | 100 | 120 |
| 12 | அரசாணி | 15 | 20 | 68 | பூண்டு | 260 | 328 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 20 | 25 | 69 | இஞ்சி | 48 | 100 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 18 | 22 | 70 | புருக்கோலின் | 170 | 180 |
| 15 | சி.வெங்காயம் | 54 | 58 | 71 | பென்னி பீன்ஸ் | 60 | 65 |
| 16 | பெ.வெங்காயம் | 50 | 55 | 72 | குடமிளகாய் | 45 | 50 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 30 | 35 | 73 | ஊட்டி அவரை | 150 | 160 |
| 18 | பச்சை மொச்சை | 50 | 60 | 74 | பஜ்ஜி மிளகாய் | 0 | 0 |
| 19 | முருங்கை | 80 | 90 | 71A | | | |
| 20 | தேங்காய் | 52 | 56 | | | | |
| 21 | மாங்காய் | 40 | 45 | | | | |
| 22 | வாழைக்காய் | 28 | 32 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 45 | 48 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 65 | 70 | 75 | எலுமிச்சை | 55 | 65 |
| 25 | சேப்பங்கிழங்கு | 45 | 50 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 50 | 65 |
| 26 | மரவள்ளி | 25 | 30 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 38 | 42 | 78 | பப்பாளி | 22 | 26 |
| 28 | கறிவேப்பிலை | 40 | 46 | 79 | மாதுளை | 120 | 200 |
| 29 | கொத்தமல்லி | 38 | 42 | 80 | திராட்சை | 60 | 70 |
| 30 | புதினா | 8 | 10 | 81 | மாம்பழம் | 150 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 20 | 22 | 82 | ஆப்பிள் (சிம்லா/காலா) | 140 | 200 |
| 32 | தண்டுக்கீரை | 20 | 22 | 83 | ஆரஞ்ச் | 40 | 65 |
| 33 | சுக்கிட்டி | 20 | 25 | 84 | சாத்துக்குடி | 60 | 70 |
| 34 | அரைக்கீரை | 20 | 22 | 85 | அன்னாசி பழம் | 60 | 70 |
| 35 | சிறுகீரை | 20 | 22 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு &வெந்தயம் | 20 | 25 | 87 | முலாம்பழம் | 50 | 55 |
| 37 | பருப்புக்கீரை | 20 | 22 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 10 | 12 | 89 | | | |
| 39 | வல்லாரை | 10 | 12 | 90 | கதளி | 45 | 50 |
| 40 | கோவக்காய் | 25 | 30 | 91 | பூவன் | 35 | 40 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 45 | 50 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 35 | 40 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 30 | 35 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 20 | 26 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 20 | 24 | 96 | நேந்திரன் | 38 | 42 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 35 | 40 | 97 | செவ்வாழை | 65 | 70 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 0 | 0 |
| 50 | நிலக்கடலை | 50 | 56 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 65 | 75 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 33 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 35 | 40 | | | | |

# வேளாண்மை துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்களை ஆய்வு செய்த மாவட்ட ஆட்சியர்



சிவகங்கை, நவ.23

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டாரத்தில் 22.11.24ல் வேளாண்மை துறையினர் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் ஆய்வு மேற்கொண்டார்.

மாநில வேளாண் வளர்ச்சி திட்டம் – இளைஞர்களை வேளாண் தொழில் முனைவோராக்குதல் திட்டத்தின் மூலம் ரூபாய் ஒரு லட்சம் மானியம் பெற்று பயனடைந்த வேளாண் பட்டதாரி லெட்சுமணன், நடத்தி வரும் பசுமை அக்ரோ புட்ஸ் நிலையத்திற்கு சென்று பார்வையிட்டார். பசுமை அக்ரோ புட்ஸ் மூலம் மதிப்புக்கூட்டி விற்பனை செய்யப்படும் பொருட்களான எண்ணேய் வகைகள் மற்றும் மதிப்புக் கூட்டப்பட்டு விற்பனை செய்யப்படும் சிறுதானிய பொருட்களை பார்வையிட்டு கலந்துரையாடினார். வேளாண்மை விரிவாக்க மையம், தேவகோட்டை சென்று விவசாயிகளுக்கு மானிய விலையில் துத்தநாக சல்பேட், தெளிப்பான் மற்றும் உயிர் உரங்கள் வழங்கப்பட்டன. தளக்காவயல் கிராமத்தில் ஊழ-55 இரக நெல் நடவு செய்யப்பட்ட விதைப்பண்ணையை ஆய்வு மேற் கொண்டார். முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் மூலம் ரூபாய் ஒரு லட்சம் மானியம் பெற்ற இளங்குடி கிராமத்திலுள்ள இயற்கை இடுபொருட்கள் உற்பத்தி யாளர் குழுவை சந்தித்தார். அவர்களிடம் கலந்துரையாடி அவர்கள் தயாரிக்கும் அங்கக இடுபொருட்களான மண்புழு உரம், பஞ்ச காவ்யா, மீன் அமிலம், ஜீவாமிர்தம், மூலிகை பூச்சி விரட்டி மற்றும் அமிர்த கரைசல் ஆகியனவற்றை ஆய்வு செய்தார். மேலும் சவேரியார் பட்டினத்தில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங் கிணைந்த வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்ட ஆழ்துளைக்கிணறு மற்றும் தரிசுநில தொகுப்பை பார்வையிட்டார். இத்திட்டத்தில் 12 விவசாயிகளுக்கு சொந்தமான 10 ஏக்கர் தரிசு நிலங்களை விளை நிலமாக மாற்றி மாங்கன்றுகள் பயிரிடப்பட்டு நுண்ணீர் பாசனம் அமைக்கப்பட்டதை ஆய்வு செய்தார்.

இவ்வாய்வின் போது சிவகங்கை மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர், செல்வி, நுண்ணீர் பாசனத்திட்டம், தேவகோட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர், கமலாதேவி, துணை வேளாண்மை அலுவலர் முத்தையா, உதவி விதை அலுவலர் முருகானந்தம் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தார்கள்.

# அதிகபட்ச விலைக்கு மேல் உரங்களை விற்றால் உர விற்பனை உரிமம் ரத்து

## வேளாண்மை இணை இயக்குநர் எச்சரிக்கை



புதுக்கோட்டை, நவ.23

புதுக்கோட்டை மாவட்ட உர விற்பனையாளர்கள் விவசாயிகளுக்கு தேவையற்ற இடுபொருட்களை இணைத்து விற்பனை செய்யக்கூடாது என புதுக்கோட்டை வேளாண்மை இணை இயக்குநர் மு.சங்கரலட்சுமி தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்பொழுது சாகுபடி செய்யப்பட்டுள்ள சம்பா நெல் பயிர், மக்காச்சோளம், நிலக்கடலை, உளுந்து, கரும்பு, தென்னை, காய்கறிகள், மா, வாழை மற்றும் மரவள்ளி கிழங்கு ஆகிய பயிர்களுக்கு தேவையான உரங்கள் மாவட்டத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

Stanes

காலநிலை மாற்றத்தைத் தாங்கி
பயிரின் இலைகள் பசுமையாகவும்
செழிப்பாகவும் வளர... பயன்படுத்துவீர் !..

கிரீன் மிராக்கிள் (GREEN MIRACLE)

கிரீன் மிராக்கிள் **பயிரை வெப்பத்திலிருந்து காத்து**, கூடுதல் வளர்ச்சி மற்றும் மகசூலைத் தரக்கூடியது

இது **இலையின் மேல் படலமாக உருவாகி, சூரியஒளி வெப்பத்தை இலையில் அதிகமாவதை தடுக்கிறது**

அதனால் இலைவழி நீர் **ஆவியாகி விரயமாவதைக்** கட்டுப்படுத்துகிறது

பயன்படுத்தும் முறை

**3 மில்லி** கிரீன் மிராக்கிளை
1 லிட்டர் தண்ணீரில் கலந்து
தெளிக்க வேண்டும்




84899 04949, 84899 10105

>>> மேலும் விபரங்களுக்கு: www.tstanes.com

பயிர் சாகுபடிக்கு தேவையான இரசாயன உரங்களான யூரியா 6862 மெட்ரிக் டன்கள், டிஏபி 835 மெட்ரிக் டன்கள், பொட்டாஷ் 1222 மெட்ரிக் டன்கள், காம்ப்ளக்ஸ் 2984 மெட்ரிக் டன்கள் மற்றும் சூப்பர் பாஸ்பேட் 746 மெட்ரிக் டன்கள் ஆகியன தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் உர விற்பனை நிலையங்கள் ஆகியவற்றில் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**உர உரிமம் பெற்ற மொத்தம் மற்றும் சில்லரை விற்பனை யாளர்கள் கவனத்திற்கு**

- உர மூட்டையின் மேல் அச்சிடப்பட்டுள்ள அதிகபட்ச விலைக்கு மேல் உரங்களை விற்பனை செய்யக்கூடாது.
- விவசாயிகளுக்கு தேவையற்ற இடுபொருட்களை இணைத்து விற்பனை செய்யக்கூடாது.
- மானிய உரங்களை பிற மாவட்டங்களுக்கு அனுப்புவதோ, பிற மாவட்டங்களிலிருந்து கொள்முதல் செய்யவோ கூடாது.
- உர விற்பனை உரிமத்தில் அனுமதி பெற்ற நிறுவனங் களிடமிருந்து கொள்முதல் செய்து, அனுமதி பெற்ற இடங்களில் மட்டுமே இருப்பு வைத்து விற்பனை செய்திட வேண்டும்.
- உரிமத்தில் அனுமதி பெறாமல் கலப்பு உரங்களை இருப்பு வைத்து விற்பனை செய்தல் கூடாது.
- விற்பனை நிலையத்தில் உர இருப்பு மற்றும் விலை விபர பலகையினை விவசாயிகளின் பார்வையில் படும்படி வைத்து தினசரி பராமரிக்கப்பட வேண்டும்.
- உரங்களை விற்பனை முனையக் கருவி மூலம் மட்டும் விற்பனை செய்திட வேண்டும்.
- தரமற்ற மற்றும் போலியான உரங்களை விற்பனை செய்தல் கூடாது.

மேலும், விவசாயிகளுக்கு தரமான உரங்கள் விநியோகம் செய்யப்படுகிறதா என உர ஆய்வாளர்கள் திடீர் ஆய்வு மேற் கொள்ளும் பொழுது, உரங்களை, அதிக விலைக்கு விற்பனை செய்தல், விவசாயிகளுக்கு தேவையற்ற இடுபொருட்களை இணைத்து விற்பனை செய்தல், விவசாயம் அல்லாத தேவை களுக்கு மானிய உரங்களை விற்பனை செய்தல், உரம் கடத்தல், பதுக்கல் ஆகிய செயல்களில் ஈடுபடுவது கண்டறியப்பட்டால் அத்தியாவசிய பண்டங்கள் சட்டம் – 1955 உரக்கட்டுபாட்டு ஆணை – 1985 மற்றும் உர நகர்வு கட்டுப்பாட்டு ஆணை 1973 ஆகிய வற்றின்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், மீறினால் உர உரிமம் இரத்து செய்யப்படும் எனவும் எச்சரிக்கப்படுகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து
கட்டணம்
கூடுதலாக.
(உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# ஓசூர் வட்டாரத்தில் சூடுகொண்டப்பள்ளி கிராமத்தில் ராபி பருவ கிராம வேளாண் முன்னேற்ற குழு பயிற்சி

கிருஷ்ணகிரி, நவ.23

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டாரத்தில் உள்ள விவசாயிகளுக்கு மாநில விரிவாக்க உறுதுணை சீரமைப்பு (அட்மா) திட்டத்தின் கீழ் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் பலவனப்பள்ளி ஊராட்சியில் உள்ள அனைத்து சமூக நிலை வேளாண் உழவர்களைக் கொண்டு சூடுகொண்டப்பள்ளி கிராம வேளாண் முன்னேற்றக் குழு பயிற்சி 22.11.24ல் நடத்தப்பட்டது.

இப்பயிற்சியானது வேளாண்மை உதவி இயக்குநர், அ.புவனேஸ்வரி தலைமையில் நடைபெற்றது. மேலும் ராபி பருவத்தில் பயிரிடும் கொள்ளு, இறவை, ராகி சாகுபடி தொழில் நுட்பங்கள் பற்றியும், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் குறித்தும், இந்த ஆண்டு செயல்படுத்தப்படும் முக்கியத் திட்டங்களான மாநில வேளாண் வளர்ச்சி திட்டம், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் பயன்கள் மற்றும் மானிய விபரங்கள் பற்றியும், விதைப்பண்ணை அமைப்பதின் பயன்கள் பற்றி விவசாயிகளுக்கு புரியும் வகையில் விளக்கி கூறினார்.

அதியமான் வேளாண் கல்லூரி மற்றும் ஆராயச்சி நிலையம், உதவி பேராசிரியர் ஏழுமலை துவரை பயிரில் இயற்கை முறையில் பூச்சி மற்றும் நோய் கட்டுப்படுத்தும் தொழில்நுட்ப முறைகள் பற்றியும், சூரிய விளக்குப் பொறி பயன்பாடு, பயன்படுத்தும் முறைகள், பயன்கள் பற்றியும், மண்ணினால் ஏற்படும் பூஞ்சாண நோய்களை கட்டுப்படுத்தும் தொழில்நுட்ப முறைகள் பற்றியும் விவசாயிகளுக்கு எடுத்து கூறினார்.

துணை வேளாண்மை அலுவலர், ஓசூர் எம்.முருகேசன் உயிர் உரங்கள், சூடோமோனாஸ், நுண்ணூட்ட உரங்களின் முக்கியத் துவம் மற்றும் பயன்கள் பற்றியும், வேளாண்மைத் துறையில் செயல்படுத்தபடும் மானியத் திட்டங்கள் பற்றியும் விரிவாக விவசாயிகளுக்கு விளக்கமளித்தார். உதவி வேளாண்மை அலுவலர், நல்லூர் கோவிந்தசாமி இயற்கை விவசாயத்தின் முக்கியத்துவம் மற்றும் பயன்கள் பற்றியும், மண்புழு உரம் தயாரிப்பு முறைகள் பற்றியும், பயிர் காப்பீட்டு திட்டத்தின் பயன்கள்

பற்றியும் மற்றும் மற்றும் பண்ணைக்கழிவுகளை உரமாக்கும் தொழில்நுட்ப முறைகள் பற்றி விவசாயிகளுக்கு விளக்க மளித்தார்.

அட்மா வட்டார தொழில்நுட்ப மேலாளர் சோ.சுகுணா, Waste Decomposter தயாரிப்பு மற்றும் பயன்கள் பற்றியும், அட்மா திட்டத்தின் பயன்பாடுகள் மற்றும் செயல்விளக்கங்கள் பற்றியும், உழவன் செயலி முக்கியத்துவம், பயன்படுத்தும் முறைகள் பற்றி விவசாயிகளுக்கு செயல்விளக்கம் காண்பித்தார்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் சண்முகம் செய்தார்.



# வேளாண்மை பயிர் பாதுகாப்பில் பயன்படும் ‘ஆடா தோடா‘ மற்றும் நொச்சி‘ பற்றி தகவல் தெரியுமா?



தற்போது அனைத்து வட்டாரத்தில் உள்ள வேளாண்மை அலுவலகத்தில் வரப்பு ஓரங்களில் நடுவதற்காக ஆடா தோடா மற்றும் நொச்சி நாற்றுகள் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. தற்போது தொடர் மழை பெய்து வருவதால் இந்த செடிகளை எளிதாக நட்டு பராமரிக்கலாம்.

**மற்ற செடி கள் இருக்கும் போது இது எதற்காக வழங்கப் படுகிறது தெரியுமா?**

1) ஆடு மாடுகள் அண்டாது.
2) உயிர் வேலியாக பயன்படுத்தலாம்.
3) இயற்கை பூச்சி விரட்டியாக (பத்திலை கசாயம், ஐந்திலை கசாயம்) போன்றவற்றிற்கு பயன்படுத்துவதால் இரசாயன பூச்சிக் கொல்லியின் பயன்பாடு குறையும்.
4) மண் வளத்தையும் (அதிக கரிம சத்துகள் இருப்பதால்) சுற்றுப்புற சூழலையும் பாதுகாக்கலாம்.
5) மருத்துவ குணமுள்ளதால் இதனுடைய இலைகளை மூலிகை மருந்து தயாரிக்கும் நிறுவனங்கள் எளிதாக நல்ல விலைக்கு கொள்முதல் செய்வதால் கூடுதலான வருமானம் கிடைக்கும்.

**1) ஆடா தோடா (ADHATODA VASICA)**

‘ஆடா தொடையைக் கண்டால் பாடாத நாவும் பாடும்‘ என்பது பழமொழி. இந்த பழமொழிக்கேற்ப இதனுடைய இலைகளை காயம் செய்து அருந்தினால் தொண்டைக்கட்டு நீங்கி நல்ல குரல் வளம் கிடைக்கும். அத்தகைய சிறப்பு வாய்ந்த மூலிகையாகும். இதனுடைய இலைகள் மிகுந்த கசப்பு தன்மை உடையது. இதனை கொண்டு தண்ணீரில் ஊறவைத்து தெளிப்பதால் பூச்சி அண்டாது. இது இயற்கையான பூச்சி விரட்டியாகும். இது உயிர் வேலியாக நிலத்தை சுற்றி நடவு செய்வதால் பயிருக்கு, கால்நடைகளிலிருந்து பாதுகாக்க முடியும்.

**ஆடா தோடா என்பதற்கான பெயர் காரணம் தெரியுமா?**

இதனுடைய இலைகளை ஆடுகள் சாப்பிடாது என்ற காரணத்தால் 'ஆடு தொடா ' என்ற காரணப் பெயர் உருவாகி 'ஆடா தோடா என்று மருவி உள்ளது.

**இதில் என்னென்ன வேதிப்பொருள்கள் இருக்கிறது தெரியுமா?**

இதில் கபத்தை அகற்றிட உதவும் VASICINE, TANNINS AND SAPPONINS உள்ளது.

**2) நொச்சி (VITEX NEGUNDA)**

கரு நொச்சி, நீல நொச்சி, நீர் நொச்சி, வெண்ணெச்சி, மயிலடி நொச்சி போன்ற பலவகை உள்ளன. முன்பெல்லாம் கிராமப்புற ஓடை, ஓடைப்புகளில் இந்த செடிகளை காணலாம். இந்த செடி இருந்தாலே பாம்புகள் நடமாட்டம் குறையும். 'அடி நொச்சி நுனி ஆமணக்கு' என்ற பழமொழி நொச்சியின் சிறப்பை உணர்த்துகிறது. இந்த இலையின் பாலானது அதிக உயிர்சத்து நிறைந்தது. இதனுடைய இலைகள் மண்ணில் விழுந்து அதிக கரிமச்சத்தை மண்ணுக்கு வழங்கும். இதனுடைய இலைகளை காயவைத்து பொடியாக்கி தானியங் களை பூச்சிகளிலிருந்து காப்பாற்ற முடியும். நொச்சி மார்யிலிருந்து கூடை பஞ்சாரம் போன்ற மதிப்புக் கூட்டப்பட்ட பொருளாக மாற்றி விற்பனை செய்யலாம். இளமார்களை கொண்டு கால்நடைகளை அடைக்க உதவும் 'படல்' போன்ற வேலி அமைக்கலாம். நொச்சி என்ற சொல்லுக்கு மதில் என சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. நொச்சி பூவை சூடி அந்த கால மன்னர்கள் போரிட்டதாக 'நொச்சி திணை ' கூறுகிறது.

ஆடாதோடா, நொச்சி கன்றுகள் இலவசமாக 'மண்ணுயிர் காத்து மண் உயிர் காப்போம்' என்ற திட்டத்தின்கீழ் வழங்கப் படுகிறது. தற்போது விவசாயிகளுக்கு 50 செடிகள் வீதம் இலவசமாக வழங்கப்படுகிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த செடிகளை வாங்கிட உரிய ஆவணங்களுடன் சம்மந்தப்பட்ட வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுகி பெற்று பயனடைய வேண்டுகிறோம்.

ஆடாதோடா, நொச்சி மருத்துவ குணமுள்ள தாவரங்கள். எனவே, பூச்சி மருந்தின் பயன்பாடு குறைந்து ஆரோக்கியமான உணவு பொருளை உற்பத்தி செய்து நஞ்சு இல்லாத உணவை உட் கொண்டு ஆரோக்கியமாக வாழுவோம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**


Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் போன்சாய் செய்முறை மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி

கோயம்புத்தூர், நவ.23

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வருகின்ற 27.11.24 புதன்கிழமை அன்று போன்சாய் செய்முறை மற்றும் தொழில்நுட்பங்கள் பற்றிய ஒரு நாள் பயிற்சி நடத்த திட்டமிடப் பட்டுள்ளது. இதில் பொதுமக்கள், அறிவியல் மாணவர்கள், புதிய தொழில்முனைவோர்கள் மற்றும் மகளிர் கலந்து கொண்டு பயன்பெறலாம். இந்த பயிற்சியின் முக்கிய நோக்கமாக, போன்சாய் செய்முறை குறித்த தொழில்நுட்பங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

| வ. எண். | விவரங்கள் | பயிற்சி பற்றிய தகவல் |
|---|---|---|
| 1. | தலைப்பு | போன்சாய் செய்முறை மற்றும் தொழில்நுட்பங்கள் |
| 2. | தேதி | 27.11.24 (புதன்கிழமை) |
| 3. | இடம் | மலரியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003. |
| 4. | நேரம் | காலை 10.00 முதல் மாலை 4.30 வரை |
| 5. | கட்டணம் | ரூ.1000/- (மதிய உணவு மற்றும் தேநீர் வழங்கப்படும்) |
| 6. | தொடர்புக்கு | முனைவர் சு.கார்த்திகேயன் (99654 35081) மற்றும் முனைவர் சீ.ப.தாமரைச்செல்வி (98433 38666) மலரியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் |
| 7. | பதிவு செய்வதற்கு கடைசி நாள் | 26.11.24 (மாலை 5.00 மணி வரை) |

# சம்பா சாகுபடியில் குருத்துப் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த விவசாயிகள் விஞ்ஞானிகள் கலந்துரையாடல்



திருச்சி, நவ.23

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவரம்பூர் வட்டாரம் கிளியூர் கிராமத்தில் விவசாயிகள் சம்பா சாகுபடி செய்துள்ளனர். தற்போது தொடர்ந்து மழை பெய்து வருவதன் காரணமாகவும் மற்றும் கடந்த வருடம் தரிசு நிலங்களாக இருந்த காரணத்தினாலும் சுமார் 30 ஏக்கர் பரப்பளவில் நெற்பயிரில் குருத்துபூச்சி தாக்குதல் மற்றும் துத்தநாக பற்றாக்குறை காணப்பட்டது.

குறைபாட்டினை திருவரம்பூர் வேளாண்மை உதவி இயக்குனர் சுகன்யா தேவி விவசாயிகள் கூறினார்கள். இதற்கு தக்க நடவடிக்கையாக குமுளூர் –வேளாண்மை கல்வி நிறுவனத்தின் பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் விஜய் கலந்து கொண்டு நெல் குருத்துப் பூச்சி கட்டுப்பாட்டிற்கு கார்டாப் ஹைட்ரோ குளோரைடு 2 கிராம்



1 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும் என பரிந்துரை செய்தார். மற்றும் துத்தநாக பற்றாக்குறைக்கு கீலேட்டட் EDTA 12% ஜிங்க் ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஒரு கிராம் என்றளவில் கலந்து கைத் தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும் என பரிந்துரை செய்தார். இந்நிகழ்வில் வேளாண்மை அலுவலர் திலகவதி மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள் பூங்குழலி, ஹேமா கலந்து கொண்டனர்.




# ஊட்டச்சத்துமிக்க சிறு தானியங்கள் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கான விழிப்புணர்வு பேரணி



சேலம், நவ.23

சேலம் மாவட்டம், நங்கவள்ளி வட்டாரத்தில் வீரக்கல் மற்றும் தோரமங்கலம் கிராமத்தில் வேளாண்மை துறை சார்பாக தேசிய உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் ஊட்டச்சத்து மிக்க தானியங்களின் முக்கியத்துவம் குறித்து விவசாயிகள் பேரணி நடைபெற்றது. வேளாண்மை உதவி இயக்குநர் து.ரமேஷ் பேரணியை தொடங்கி வைத்தார். ஊட்டச்சத்து மிக்க சிறுதானியங்களான கம்பு, சோளம், ராகி, மக்காச்சோளம், திணை, சாமை, வரகு, குதிரைவாலி உள்ளிட்டவற்றின் இரகங்கள், ஏற்ற பருவம், சாகுபடி முறைகள், அறுவடை மற்றும் மதிப்பு கூட்டுதல் தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கம் அளித்தார். தொடர்ந்து பேரணியில் சிறுதானியங்கள் குறித்த விழிப்புணர்வு வாசகங்கள் மற்றும் படங்கள் அடங்கிய பதாகைகள் மற்றம் மைக் செட்டுடன் கூடிய வாகனம் கொண்டு திரளான விவசாயிகள் முக்கிய வீதிகள் வழியே ஊர்வலமாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இப்பேரணியில் வேளாண்மை அலுவலர் பெ.கோபி, உதவி வேளாண்மை அலுவலர்கள், அட்மா திட்ட அலுவலர்கள் மற்றும் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் பேரணியில் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# இலால்குடி வட்டாரம் மணக்கால் கிராம முன்னேற்ற குழு பயிற்சி

திருச்சி, நவ.23

திருச்சி மாவட்டம், இலால்குடி வட்டாரம், மணக்கால் கிராம முன்னேற்ற குழு பயிற்சி ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையம் மும்முடி சோழ மங்களத்தில் நடைபெற்றது. இதில் சம்பா நெல் சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றி லால்குடி வட்டார வேளாண்மை அலுவலர் கௌசல்யா பேசுகையில் கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சி திட்ட கிராமமான கீழ் மணக்கால் முன்னேற்ற குழு பயிற்சியில் வேளாண்மைத் துறையில் செயல்படுத்தப்படும் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சி திட்டம், மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம், மானிய திட்டங்கள், தமிழ் மண்வளம் செயலி பயன்படுத்துதல், மண் மாதிரி சேகரிப்பு அவசியம், சான்று பெற்ற விதைகள் தேர்வு செய்தல் மற்றும் மண் மாதிரி அடிப்படையில் உர நிர்வாகம் அளித்தல், உழவன் செயலி பயன்படுத்துதல் பற்றி விரிவாக விளக்கி கூறி நெல் பயிர்பாதுகாப்பு கையேடு, சாகுபடி தொழில்நுட்ப கையேடு வழங்கினார்.

துணை வேளாண்மை அலுவலர் அய்யாசாமி பேசுகையில் பாரதப் பிரதமரின் பயிர் காப்பீடு திட்டம், மானிய திட்டங்கள், மின் கலத்தின் இயங்கும் தெளிப்பான், தார்பாய், மானிய விலையில் பெற்று கொள்ள விவசாயிகளுக்கு விளக்கி கூறினார். வேளாண்மை உதவி அலுவலர் சந்திரசேகர் பேசுகையில் சம்பா சாகுபடியில் உர மேலாண்மை, பாதுகாப்பாக பயிர் பாதுகாப்பு மருந்துகள் பயன்படுத்துதல் தேர்வு செய்தல் பற்றி விரிவாக விளக்கி கூறினார். தோட்டக்கலை அலுவலர் சுரேஷ் தோட்டக்கலை துறை செயல் படுத்தப்படும் மாடி தோட்டம் அமைத்தல், தோட்டக்கலை செயல் படுத்தப்படும் மானிய திட்டங்கள் பற்றி விரிவாக விளக்கி கூறினார். அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் சபரிச் செல்வன், அட்மா திட்ட செயல்பாடுகள், விவசாயிகள் கௌரவ நிதி திட்டம் பற்றி விளக்கி கூறினார். மேலும் விவசாயிகள் பாரத பிரதமர் விவசாயிகள் கௌரவ நிதி திட்டத்தில் சுயவிவர புகைப்படத்தை eKYC செய்து பயனடைய கேட்டுக்கொண்டார். உதவி தொழில் நுட்ப மேலாளர் கார்த்திக், பிஎம் கிசான் திட்டத்தில் பதிவு செய்து விவசாயிகள் அனைவரும் தங்களது சுயவிபரம் புதுப்பிக்க கேட்டுக் கொண்டார். இதற்கான ஏற்பாட்டினை சந்திரசேகர், வேளாண்மை உதவி அலுவலர் செய்திருந்தார். இக்கூட்டத்தில் மணக்கால் கிராமத்தை சார்ந்த பல முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர்.

# TNAU திரவ பயறு ஒண்டர் – ஓர் பார்வை




சேலம், நவ.23

பயறு வகைப் பயிர்களுக்கு ட்ரோன் மூலம் தெளிப்பதற்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் மற்றும் வளர்ச்சி ஊக்கிகள் கலந்த திரவம்.

**பயன்படுத்தும் முறை**

அளவு : 1 லிட்டர் / ஏக்கர்சு தெளிப்பு திரவம் : 20 லிட்டர் / ஏக்கர்

**தெளிக்கும் பருவம்**

பச்சைப்பயறு / உளுந்து/துவரை : பூக்கும் பருவம்.

முதல் தெளிப்பு செய்த 15 நாட்களுக்குப் பிறகு ஏக்கருக்கு ஒரு லிட்டர் அடர் TNAU திரவ பயறு ஒண்டரை 19 லிட்டர் நீரில் கலந்து




ஒட்டும் திரவம் (20 மி.லி.) சேர்த்து ட்ரோன் மூலம் தெளிக்க வேண்டும்.

**பயன்கள்**

- பூக்கள் உதிர்வது குறையும்.
- பயறு விளைச்சல் 20 சதம் வரை கூடும்.
- வறட்சியைத் தாங்கும் தன்மை அதிகரிக்கும்.
- ஊட்டச்சத்துக்களை உட்கிரகிக்கும் திறன் அதிகரிக்கும்.

விலை : ரூ.545 / லிட்டர்.

மூன்று மாதத்திற்குள் பயன்படுத்தவும் என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மை அலுவலர் த.நிவேதாஸ்ரீ விவசாயி களை கேட்டுக்கொண்டுள்ளார்.

# வேளாண்மையில் தாவர வளர்ச்சி ஹார்மோன்களின் பயன்பாடுகள்

தாவர வளர்ச்சி ஹார்மோன்கள் (Plant Hormones) என்பது இயற்கையாக தாவரங்களில் உற்பத்தியாகும் வேதிப்பொருட்கள் ஆகும். ஐந்து முக்கிய ஹார்மோன்களாவன, ஆக்சின், ஜிப்ரலின், சைட்டோகைனின், எத்திலின், அப்சிசிக் அமிலம் ஆகியன தாவர




வளர்ச்சியை ஒழுங்குபடுத்துவதிலும், தாவர படிம வளர்ச்சியிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது.

**பண்புகள்**

● இயற்கையாக தாவரத்தின் வேர்கள், தண்டுகள் மற்றும் இலைகளில் உற்பத்தியாகிறது. மேலும் இவை செயற்கையாக ஆய்வகங்களில் தயாரிக்கப்படுகிறது

● தாவர வளர்ச்சியைத் தூண்டுதல், தடை செய்தல், வளர்ச்சி உருமாற்றம் போன்றவற்றில் முக்கிய பங்கு வகிக்கிறது.

**ஆக்சின்**

● முளைக்குருத்து மற்றும் தண்டில் செல்நீட்சி தூண்டப்படுகிறது.

● ஆக்சின் வேரின் வளர்ச்சியைத் தூண்டுகிறது.

● விதையிலாக் கனிகள் (பார்த்தினோகார்பிக் பழங்கள்) உருவாக்குவதில் செயற்கை ஆக்சின் முக்கியப் பங்கு வகிக்கிறது.

● விதை உறக்கத்ததை நீக்குகிறது.

● விவசாய நிலங்களில் களைகள் நீக்குவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. (எ.கா): 2, 4 – ம் மற்றும் 2, 4 5 – T.

**ஜிப்ரலின்**

● விதை முளைத்தலை தூண்டுகிறது.

● இவை உருளைக்கிழங்கில் மொட்டு உறக்கத்ததை நீக்குகிறது

● சர்க்கரையின் அளவு குறையாமல் கரும்பில் கணு விடைப் பகுதி நீட்சி தூண்டப்படுகிறது. இதனால் மகசூல் அதிகரிக்கிறது.

● பொதுவாக ஈராண்டுத் தாவரங்களில் இரண்டாம் ஆண்டில் மலர்தல் நிகழ்கிறது. மலர்தல் உருவாதலுக்கு அத்தகைய தாவரங்களை தட்பப்பதனத்திற்கு உட்படுத்தவேண்டும். இத்தகைய தாவரங்களில் ஜிப்ரலின்களை தெளிக்கும் போது தாவரங்களை தட்பப்பதனத்திற்கு உட்படுத்ததாமல் முதல் ஆண்டிலேயே மலர்தல் உருவாக்கப்படுகிறது.

**சைட்டோகைனின்**

● செல் பகுப்பை தூண்டுகிறது.

● பட்டாணி தாவரத்தில் பக்கமொட்டுகளின் வளர்ச்சி தூண்டப்படுகிறது.

● சைட்டோகைனின் கனிம ஊட்டஇடப்பெயர்ச்சி அடையச் செய்து தாவரங்கள் வயதாவதை தாமதப்படுத்துகிறது.

● புதிய இலைகள், பசுங்கணிகம் மற்றும் பக்ககிளைகள் உருவாதலை தூண்டவும் உதவுகிறது.

● ஒளி உணரும் தன்மை பெற்ற விதைகளில் அதன் உறக்கத்ததை நீக்கி முளைக்கும்படி செய்கிறது. எடுத்துக்ககாட்டு: புகையிலைத் தாவரம்.

**எத்திலின்**

● எத்திலின் கனி பழுத்தல் மற்றும் சுவாசித்தல் நிகழ்ச்சியினை தூண்டுகிறது.

● மொட்டுக்கள் மற்றும் விதைகள் உறக்கத்ததை நீக்குகிறது.

● பக்கவேர்கள் மற்றும் வேர்தூவிகளை தோற்றுவிக்கிறது.

● தாவர வேரில் உறிஞ்சுதல் பரப்பபை அதிகரிக்க உதவுகிறது.

● தண்டு நீட்சியடைதலை தடுக்கிறது (கணுவிடைப் பகுதி குறைகிறது).

**அப்சிசிக் அமிலம்**

● அப்சிசிக் அமிலம் என்பது வீரியமிக்க வளர்ச்சி அடக்கி ஆகும். மொட்டு மற்றும் விதை உறக்கத்ததை தூண்டுகிறது.

● இலைகள், மலர்கள், கனிகள் ஆகியவற்றில் உதிர்தல் அடுக்கு உருவாக்கி உதிர்தலை தூண்டுகிறது.

● அப்சிசிக் அமிலம் வறட்சி காலங்களில் தாவரத்தின் இலைத் துளையை மூடச் செய்கிறது. இலைத்துளைகள் மூடுவதின் மூலம் இது நீராவி போக்கின் அளவை குறைக்கிறது.

தகவல் : A.Priya Dharshini & K.S.Glory, Assistant Professors, Krishna College of Agriculture and Technology, Srirengapuram - 625 532, Usilampatti, Madurai Dist.




Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
CML-6400119610
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO
CERTIFIED
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

# பண்ணை பள்ளி மூலம் நெற்பயிரில் ஒருங்கிணைந்த மேலாண்மை பயிற்சி



சேலம், நவ.23

சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டாரம், மேலூர் கிராமத்தில் வேளாண்மை துறையில் ஆத்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பண்ணை பள்ளி பயிற்சி மூலம் நெற்பயிரில் ஒருங்கிணைந்த மேலாண்மை என்னும் தலைப்பின் கீழ் பயிற்சி அளிக்கப்பட்டது.




இப்பயிற்சியானது ஆறு வகுப்புகளாக நடைபெறும். முதல் வகுப்பு விதைப்பு முதல் கடைசி வகுப்பு அறுவடை வரை இதில் விதை நேர்த்தி விதை தேர்ந்தெடுக்கும் நேர்த்தி, நாற்றங்கால் பராமரிப்பு மற்றும் கோனோவீடர் பயன்பாடு மற்றும் கலை மேலாண்மை மற்றும் பூச்சி மேலாண்மை இதன் பிறகு பயிர் முதிர்ச்சி பருவம் கண்டறிந்து அறுவடை செய்தல் அறுவடைக்குப் பின் அறுவடை செய்த நெற்பயிர்களை பூச்சி தொற்று தாக்காமல் எவ்வாறு சேமிப்பது என்பது குறித்து முழு பயிற்சியும் செயல் விளக்கம் மூலமாக ஒவ்வொரு வகுப்புகளாக நடைபெற்றது.

இப்பயிற்சிக்கு ஆத்மா திட்ட சேர்மன் தங்கசாமி தலைமை ஏற்றார். துறை சார்ந்த திட்டங்கள் விவசாயிகளுக்கு எடுத் துரைத்தனர். இப்பயிற்சியில் புதிய தொழில்நுட்பங்களை எடுத்துரைப்பதற்காக முனைவர் செந்தில்குமார் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தை சேர்ந்த இவர் விவசாயிகளுக்கு இயற்கை முறையில் எவ்வாறு சாகுபடி செய்வது குறித்தும் பூச்சி கட்டுப்பாடு குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

மேலும் இதற்கான முழு ஏற்பாடுகளையும் அட்மா திட்ட அலுவலர்களான வட்டார தொழில் நுட்ப மேலாளர் மு.சோபனா மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் துறையரசு மற்றும் அருண்குமார் ஆகியோர் செய்து இருந்தனர்.

இப்பயிற்சியில் நெல் சாகுபடி செய்யும் 25 விவசாயிகள் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

